மாவட்ட உரிமையியல்  நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.D.ராம்கணேஷ்  M.A., M.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.
2021ம் வருடம்  டிசம்பர் மாதம் 10ம் நாள்
ஸ்ரீபிலவ வருடம் கார்த்திகை மாதம் 24ம் நாள் வெள்ளிக்கிழமை

**CNR No. TNMD19000132-2019**
**I.A . No. 897/2019**

**in**

**O.S. No. 73/2019**

புஷ்பம்

..... மனுதாரர்/வாதி

//எதிர்//

1. அமிர்தவள்ளி
2. ஜே. ராஜேந்திரன்

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 07.12.2019ந் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.N. ராஜாஜி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.M. ரமணி அவர்கள் ஆஜராகியும், கடந்த 12.11.2021ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

## உத்தரவு

இந்த நிர் மனுவும் மனுதார்/வாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் இடைக்கால மனு I.A.No. 429/2019ல் கடந்த 12.09.2019ல் பிறப்பிக்கப்பட்ட தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவினை மீறி செயல்பட்டதற்காக எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு குற்றம்

தொடர்பாக சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்க கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 2(A) ன்படி, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், தாவா சொத்தானது மனுதாரரின் கணவரின் நல்லம ரெட்டியாரின் தந்தையான ரெங்கமரெட்டியார் என்பவர் கடந்த 02.05.1959ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின்படி கிரையம் பெற்று அனுபவம் செய்து அவருக்கு பின் அதனடிப்படையில் நல்லம ரெட்டியார் குடும்பத்தினருடன் வசித்து அனுபவம் செய்து வந்ததாகவும், மேற்படி நல்லம ரெட்டியார் 12.12.2015ம் தேதி இறந்த பின்னீடு அவரது மனைவியான மனுதாரர்/வாதி மட்டும் தாவா சொத்தினை வீட்டு வரி செலுத்தி அனுபவம் செய்து வருவதாகவும், கடந்த 1950ம் வருடம் தாவா வீட்டினை கட்டும்போது அதன் வடக்கு பகுதியில் வீட்டிற்கு தேவையான காற்று வெளிச்சம் கிடைக்க சன்னல் வைத்து 2 அடி இடைவெளி விட்டு கட்டப்பட்டிருந்தது என்றும், மேற்படி 02.05.1959ம் தேதி முதல் மனு சொத்தின் வடக்கு பகுதியில் உள்ள 2 அடி இடத்தை காலியிடமாக பயன்படுத்தி தாவா சொத்தை அனுபவம் செய்து வந்ததாகவும், அதேபோல் மனுதாரரின் வீட்டிற்கு வடக்கே கிழமேல் 45 அடி தென்வடல் 2 அடி ஆக மொத்தம் 84 சதுரடி அளவுள்ள சொத்தானது மனுதாரர்/வாதியின் தனிப்பட்ட பாதையாக பயன்பாட்டில் இருந்து வந்ததாகவும், இந்நிலையில், மனுசொத்தின் வடக்குபகுதியில் உள்ள இடத்தை 05.02.2004ம் தேதியில் P.R. ராமசாமி ரெட்டியார் மற்றும் வெங்கிடசாமி ரெட்டியார் ஆகிய இருவரிடமிருந்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் விலைக்கு வாங்கி அனுபவித்து வருகின்றனர் என்றும், தற்சமயம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பழைய வீட்டினை இடித்துவிட்டு புதிய வீடு கட்டிய போது, அவர்களது வீட்டிற்கும், மனுதாரரின் வீட்டிற்கும் இடையே உள்ள 2அடி இடத்தினை அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்தும் மனுதாரரின் வீட்டை ஒட்டியும், தகரத்தின் மீதும் கட்டிடங்கள் கட்டியும், மனுதாரரின் வீட்டிற்கு காற்று வெளிச்சம் ஆகிய சட்டப்படியான உரிமைகள் கிடைக்காமல் தடுத்து வருகின்றனர் என்றும், அதனால் மனுதாரருக்கு கிடைக்க வேண்டிய வசதி உரிமைகள் சட்டப்படி கிடைக்கவும், எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளின் செயலை தடுக்கும் பொருட்டு தகுந்த நிவாரணங்கள் வேண்டி அசல் வழக்கு தாக்கல் செய்து, தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இடைக்கால மனு I.A No. 429/2019ன்படி மனு தாக்கல் செய்து இருதரப்பு விசாரணைக்கு பின்பு 12.09.2019ம் தேதியில் மனுதாரருக்கு ஆதரவாக தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் எதிர்மனுதாரர்கள் மேற்படி உத்தரவிற்கு வேண்டுமென்றே கீழ்படியாமல் மீண்டும் மனுதாரரின் வீட்டை ஒட்டி கட்டிடங்கள் கட்டியும், தகரத்தின் மீது கட்டிடங்கள் கட்டியும் மனுதாரருக்கு வேண்டிய காற்று வெளிச்சம் ஆகியவற்றை மறைத்தும் தடுத்தும் விட்டனர் என்றும், எனவே எதிர்மனுதாரரின் செயல் நீதிமன்ற அவமதிப்புக்குரியதாக இருப்பதால் தகுந்த நடவடிக்கை

எடுக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டதாக வாதுரைக்கப்பட்டது.

**2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம்:**

மனுவில் கண்டுள்ள விபரங்கள் பொய்யானவை என்றும், மனு சொத்து ரெங்கமரெட்டியார் என்பவரால் 02.05.1959ல் கிரையம் பெற்று அவரது அனுபவத்தில் இருந்து மேற்படி ரெங்கமரெட்டியார் மகனான நல்லமரெட்டியார் 12.12.2015ம் தேதியில் இறந்த பின்னீடு அவரது வாரிசு அடிப்படையில் மனுதாரர் அனுபவம் செய்து வருவதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. மற்றபடி அசல் வழக்கு சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1வது லக்க சொத்திற்கு வடக்கு பகுதியில் காற்று வெளிச்சம் ஆகியவற்றிற்காக 2 அடி இடைவெளி விட்டு வீடு கட்டப்பட்டிருந்ததாகவும், மேற்படி 2 அடி இடைவெளியை பாதையாக பயன்படுத்தி அனுபவம் செய்து வருவதாகவும், மேற்படி பாதை 45X2 ஆகிய மொத்தம் 84 சதுரடியுள்ளது என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மனுதாரரின் வீட்டை ஒட்டியும், வீட்டின் தகரத்தின் மீது ஒட்டியும் வீட்டிற்கு வேண்டிய காற்று வெளிச்சம் ஆகியவற்றை தடை செய்து மனுதாரருக்கு வேண்டிய வசதி உரிமைகள் கிடைக்க விடாமல் செய்து விட்டதாகவும் கூறுவது பொய்யானதாகும், உண்மையில் மனுதார்/வாதிக்கு பாத்தியப்பட்ட வடபுற சுவற்றில் சந்து போன்ற அமைப்போ அல்லது தூம்பு போன்ற அமைப்போ கிடையாது என்றும், எனவே அதனடிப்படையில் மனுதாரருக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கக்கூடியதில்லை என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அதனை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்களா என்பதை நிரூபணம் செய்யும் பொருட்டு வருவாய்துறை அதிகாரியான சர்வேயர் உதவியுடன் நீதிமன்ற ஆணையாளர் மூலம் அளவீடு செய்து தான் தாவா சொத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதா என்பதை நிர்ணயம் செய்யமுடியும் என்றும், மேற்படி பொருண்மையினை இடைக்கால மனு I.A.No. 429/2019 மனுவிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்றும், எனவே தாவா சொத்தினை நிலஅளவையர் உதவியுடன் அளவீடு செய்தால் தான் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வசதி உரிமை பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை நிர்ணயம் செய்ய இயலும் என்றும், தாவா சொத்துக்கள் எந்த சர்வே எண்ணில் கட்டுப்பட்டுள்ளது என்ற விபரத்தை குறிப்பிடவில்லை என்றும், மேற்படி விபரமும் நீதிமன்ற உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்களுக்கு பாத்தியமான பழைய வீட்டு சுவற்றின் மீதே புதிய கட்டுமான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள், 12.09.2019ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு பின்னீடு எந்த விதமான மாறுதல்களையும், புதிய கட்டுமான பணிகளையும் மேற்கொள்ளவில்லை என்றும், மற்றும் அதற்கான விபரம் மற்றும் அடையாள அமைப்புகளை மனுதாரர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், மனுதாரர்/வாதி அசல் வழக்கில்

தாக்கல் செய்த இடைக்கால மனுக்கள் I.A. No. 429/2019 மற்றும் I.A.No. 430/2019 மனுக்களில் குறிப்பிட்ட பொருண்மைகளை தொடர்ந்து பின்னீடு தாக்கல் செய்த இந்த மனுவிலும் பொய்யாக கூறி வருகின்றார் என்றும், அதேபோல் மேற்படி 12.09.2019ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு பின்னீடு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாவா சொத்தில் எந்த பகுதியில் புதிய கட்டுமானத்தையோ எந்த விதமான மாறுதல்களையோ அல்லது அடையாளத்தையோ அத்துமீறி கட்டியுள்ளார் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், எனவே பொய்யாக தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யும்படி எதிர்வாதம் செய்யப்பட்டது.

**<u>3) மனுதாரர் தரப்பு திருத்தல் மனுவின் சுருக்கம்</u>**

மனுதாரர்/வாதி தரப்பில் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை தொடர்பாக எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பாத்தியமான சொத்தினை இம்மனு நடவடிக்கையில் சேர்த்து திருத்தம் செய்ய வேண்டியது அவசியமானதாக இருப்பதாகவும், அதனடிப்படையில் தாக்கல் செய்த திருத்தல் மனு இடைக்கால மனு எண். IA.No.236/2021ன்படி கடந்த 17.04.2021ல் அனுமதிக்கப்பட்டதாகவும், எனவே மனு அனுமதிக்கப்படவேண்டுமென வாதுரைக்கப்பட்டது.

**<u>(4) எதிர்மனுதாரர்கள் தரப்பு கூடுதல் எதிர் உரையின் சுருக்கம்</u>**

திருத்தல் மனுவில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் தவறானது ஆகும். பிராது மற்றும் இடைக்கால மனு எண். IA.No.429/2019 ஆகியவற்றில் இரண்டு லக்க சொத்துக்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டு, அதனடிப்பிடையிலேயே 12.09.2019ல் Status quo உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், திருத்தல் மனுவில் குறிப்பிடப்பட்ட மூன்றாவது லக்க சொத்து பிராது மற்றும் இடைக்கால மனு எண்கள் IA.No.429/2019 மற்றும் IA.No. 897/2019ல் குறிப்பிடவில்லை என்றும், தாவா சொத்தாக தென்வடல் 2 அடி கிழமேல் 45 அடி மொத்தம் 85 சதுரடி மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், Staus quo உத்திரவும் முதல் இரண்டு லக்க சொத்துக்களை பொறுத்து மட்டுமே பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே மூன்றாவது லக்க சொத்து சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றும், மேற்படி மூன்றாவது லக்க சொத்து மனுதாரர்/வாதிக்கு பாத்தியமானது என்பதற்குரிய வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும், பிரதிவாதிகளின் சொத்து தொடர்பாக எவ்வித உத்திரவும் பிறப்பிக்கப்படவில்லை என்றும், அசல் வழக்கு பிராதில் திருத்தம் செய்யாமல் இம்மனு நடவடிக்கையில் மட்டும் 3வது லக்க சொத்தை சேர்த்து திருத்தம் செய்துள்ளது சட்டப்படி

ஏற்கத்தக்கதல்ல என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென எதிர்வாதம் செய்யப்பட்டது.

**(5)** மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதை தீர்வு காண வேண்டியது பொருண்மை ஆகும்.

**<u>தீர்வு:-</u>**

**(6)** இரு தரப்பும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்யும்போது, அசல் வழக்கும் 2 இலக்க சொத்துக்களை பொறுத்து மனுதார்/வாதியால் செயல் உறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் செலவு தொகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதில், **"1வது லக்க சொத்து மனுதாரரின் வீடாகும். 2வது லக்க சொத்து தாவா 1வது லக்க சொத்திற்கு வடக்கே கிழமேல் ஜாதியடி 45 தென்வடல் ஜாதியடி 2 அளவுள்ள 90 சதுரடி உள்ள இடம்"** என்று சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு I.A.No. 429/2019 மனுவில் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் தொடர்பாக இருதரப்பு விசாரணைக்கு பின்பு கடந்த 12.09.2019ம் தேதியில் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதிகள் தரப்பு 5.2.2004ம் வருட கிரையப்பத்திரத்தை பரிசீலனை செய்யும்போது அதன் சொத்து விபர நான்குமாலில் தெற்கு நான்குமாலாக <u>"நல்லம ரெட்டியார் வீட்டுக்கும் பாதைக்கும் வடக்கு"</u> எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி நல்லம ரெட்டியார் வாதியின் கணவர் என்பது பிரதிவாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மை ஆகும். எனவே வாதியின் தாவா சொத்திற்கும், பிரதிவாதிகளின் கிரையப்பாத்திய சொத்திற்கும் இடையில் பாதை ஒன்று இருந்துள்ளது என்பது மேற்படி பிரதிவாதிகளின் கிரையப்பத்திரம் மூலம் தெரிய வருகிறது. ஆனால் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில் வாதி வீட்டின் வடபுற சுவரும், பிரதிவாதிகளின் வீட்டுச்சுவரும் 50 வருடங்களுக்கும் மேலாக ஒட்டினார் போல் பொதுச்சுவராக இருந்து வந்துள்ளதாக முரண்பட்டு எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

**(7)** எனவே தரப்பினர்களின் சொத்துக்கள் அடுத்தடுத்து உள்ள நிலையிலும், தற்காலிக உறுத்துக்கட்டளை மனு விசாரணையில் தாக்கல் செயயப்பட்ட புகைப்படங்களின்படி தாவா சொத்தின் வடபுறமுள்ள சுவர் மற்றும் பிரதிவாதிகளின் புதியகட்டுமானம் ஆகியவை ஒன்றொடு ஒன்று ஒட்டினார் போல் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்ற நிலையிலும், பிரதிவாதிகள் கிரையப்பத்திர சொத்து விபரத்தில் வாதி, பிரதிவாதிகள் சொத்துக்களுக்கிடையே பாதை

இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும், தாவா சொத்தின் அளவீடு மற்றும் உரிமைப்பாத்தியம் தொடர்பாக முழுமையான சாட்சிய சான்றாவணங்களின்படியே தீர்மானம் செய்ய இயலும் என்பதால், அது வரை தாவா சொத்து தற்போது இருக்கின்ற நிலையிலேயே இருந்து வருவது வழக்கினை அறுதியாக தீர்மானம் செய்வதற்கு அவசியமானதாகவும், நியாயமானதாகவும், இயற்கை நியதிக்கு உகந்ததாகவும் இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதி, அதனடிப்படையில் மேற்படி பொருண்மைகளின்படி முதல் தோற்ற வழக்கும் சமச்சீர் வாய்ப்பும் வாதிக்கு சாதகமாக உள்ளதாகவே கருதியும், மேலும் இடைக்கால மனு எண். IA.No. 429/2019 மனுப்பரிகாரமான தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்படவில்லையென்றால் கட்டுமான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வாதிக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்பதோடு வழக்கினை அறுதியாக தீர்மானம் செய்ய இயலாது என்ற அடிப்படையில் இடைக்கால மனு எண். IA.No. 429/2019ல் தற்காலிக உறுத்துக்கட்டளை உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவிலும், பக்கம் 5 பாரா 9ல் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> (9). எனவே தரப்பினர்களின் சொத்துக்கள் அடுத்தடுத்து உள்ள நிலையிலும், தாவா சொத்தின் வடபுறமுள்ள சுவர் மற்றும் பிரதிவாதிகள் சொத்து ஆகியவற்றில் ஒன்றொடு ஒன்று ஒட்டினார் போல் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்ற நிலையிலும், பிரதிவாதிகள் கிரையப்பத்திர சொத்து விபரத்தில் வாதி, பிரதிவாதிகள் சொத்துக்களுக்கிடையே பாதை இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும், தாவா சொத்தின் அளவீடு மற்றும் உரிமைப்பாத்தியம் தொடர்பாக முழுமையான சாட்சிய சான்றாவணங்களின் படியே தீர்மானம் செய்ய இயலும் என்பதால், அதுவரை தாவா சொத்து தற்போது இருக்கின்ற நிலையிலேயே இருந்து வருவது வழக்கினை அறுதியாக தீர்மானம் செய்வதற்கு அவசியமானதாகவும், நியாயமானதாகவும், இயற்கை நியதிக்கு உகந்ததாகவும் இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மேற்படி பொருண்மைகளின்படி முதல் தோற்ற வழக்கு சமச்சீர் வாய்ப்பும் வாதிக்கு சாதகமாக உள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இவ்வுத்திரவு வழங்கப்படவில்லையென்றால் கட்டுமான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வாதிக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்பதோடு வழக்கினை அறுதியாக தீர்மானம் செய்ய இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

என பரிசீலனை செய்யப்பட்டு, அதனடிப்படையில் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே பிரச்சனைக்குரிய தாவா சொத்து பகுதியினை பொறுத்து ஏற்கனவே இருதரப்பு விசாரணைக்கு பின்னீடு தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி 12.09.2019-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி உத்தரவுக்கு பின்னீடு மனு சொத்தில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்தோ அல்லது தொடர்ச்சியாக

கட்டுமான பணிகள் மேற்கொண்டு தாவா சொத்தில் கட்டிடம் கட்டியுள்ளார்களா என்பதை தீர்வு காண வேண்டியது அவசியமானதாக உள்ளது. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் 4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 ஆனது IA.No. 429/2019 உத்தரவு மீறப்பட்டது தொடர்பாக நீதிமன்ற அவமதிப்பு குறித்த சட்ட அறிவிப்பு ஆகும். ம.சா.ஆ.2 அதனை எதிர்மனுதாரர்கள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டையாகும். ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.4 ஆகியவை தற்சமயம் எதிர்மனுதாரர்கள் கட்டியுள்ள கட்டுமான பணிகள் தொடர்பாக எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் அதற்கான குறுந்தகடு ஆகும். எதிர்மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கின் பிராது நகல் மற்றும் IA.No. 429/2019ன் இடைக்கால மனு நகல் எ.ம.சா.ஆ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இருதரப்பு வாதுரைகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது, ம.சா.ஆ.1 ஆகிய சட்ட அறிவிப்பினை எதிர்மனுதாரர்கள் பெற்று கொண்ட போதிலும் அதனை மறுத்து பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டதாக எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித வாதுரையோ சாட்சிய சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் இடைநிலை மனு I.A.No. 429/2019 மனு விசாரணையின் போது, எதிர்மனுதாரர்கள் தரப்பில் 05.02.2004ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிரைய பத்திர சொத்து விபரத்தில் நான்குமால் விபரத்தில் **"நல்லம ரெட்டியார் வீட்டிற்கும் பாதைக்கும் வடக்கே"** என தெளிவாக குறிப்பிடப்பட்டு பத்திரம் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி பொருண்மையினை எதிர்மனுதாரர்கள் தரப்பில் மறுக்கவில்லை. மேலும் இடைக்கால மனு எண் I.A.No. 429/2019 விசாரணையின் போது மனுதாரர்கள் தரப்பில் கட்டுமான பணிகள் தொடர்பாக நான்கு புகைப்படங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேபோல் எதிர்மனுதாரர்கள் தரப்பிலும் நான்கு புகைப்படங்கள் குறுந்தகடுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகைப்படங்கள் அனைத்தும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் இடைக்கால மனு விசாரணையின் போது எடுக்கப்பட்டவை என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மையாக உள்ளது.

**(8)** மேற்படி இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்ட புகைப்படங்களை பரிசீலனை செய்யும்போது, எதிர்மனுதாரர்கள் மேற்கொண்டுள்ள கட்டுமான பணிகள் ஆரம்ப நிலையில் உள்ளது தெரியவருகிறது. ஆனால் பின்னீடு இம்மனு விசாரணையின் போது, கடந்த 14.10.2020 மற்றும் 23.11.2020ம் தேதியில் மனுதாரர் தரப்பில் மேற்படி எதிர்மனுதாரர்கள் I.A.No. 429/2019 உத்தரவினை மீறி கட்டிடம் கட்டி கட்டுமான பணிகளை நிறைவு செய்து வீடு கட்டி முடித்து விட்டார் என்பதற்கு ஆதரவாக ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.4ன்படி மொத்தம் 5 புகைப்படங்கள் குறுந்தகடுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடைக்கால மனு I.A No. 429/2019 மனு விசாரணையின் போது தாக்கல் செய்யப்பட்ட புகைப்படங்கள் மற்றும் இம்மனு

விசாரணையின் போது 14.10.2020 மற்றும் 23.11.2020 ஆகிய தேதிகளில் தாக்கல் செய்யப்பட்ட புகைப்படங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து பரிசீலனை செய்யும்போது, எதிர்மனுதாரர்கள் இடைக்கால மனு எண் IA. No. 429/2019ன்படி தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னீடு தொடர்ச்சியாக கட்டுமான பணிகள் மேற்கொண்டு மேற்படி கட்டுமான பணிகள் நிறைவு செய்துள்ளார்கள் என்பது தெரியவருகிறது.

**(9)** மேலும் மேற்படி I.A.No. 429/2019 உத்தரவிலும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் வீடுகள் அடுத்தடுத்து தெற்கு வடக்காக அமைந்துள்ளதால், தாவா சொத்தான கிழமேல் 45 அடி தென்வடல் 2 அடி அளவுள்ள சொத்தானது மனுதாரருக்கு உரிமைபாத்தியமானதா அல்லது பிரதிவாதிகளுக்கு உரிமைபாத்தியமானதா அல்லது மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் மனுதாரருக்கு பாத்தியமான சொத்தினை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து கட்டுமான பணிகளை மேற்கொண்டுள்ளனரா என்பதை முழுமையான விசாரணைக்கு பின்னீடே தீர்வு காணமுடியும் என்பதால், பிரச்சனைக்குரிய சுவற்று பகுதியில் வழக்கின் இருதரப்பினர்களும் எவ்வித மாறுதலும் செய்யக்கூடாது என்றும், தற்போது உள்ள நிலையிலே இருந்து வரவேண்டுமென்றும் (Status quo) தற்காலிக உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நிர் மனுவில் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிர்உரையிலும் மற்றும் எதிர்மனுதாரர்கள் வாதுரையிலும், எதிர்மனுதாரர்கள் மேற்கொண்டு வரும் கட்டுமான பணிகள் நிறைவு அடைந்து விட்டது என்பதை மறுத்து எவ்வித எதிர்வாதமும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வாதம் செய்யவில்லை. மாறாக எதிர்மனுதாரருக்கு பாத்தியமான பழைய சுவற்றின் மீதே கட்டுமான பணிகள் நடைபெற்று வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலிருந்தே எதிர்மனுதாரர்கள் தொடர்ச்சியாக தாவா சொத்துள்ள பகுதியில் கட்டுமான பணிகள் செய்து நிறைவு செய்துள்ளது ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மையாக உள்ளது. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.4 புகைப்படங்கள் அதனை உறுதிபடுத்தும் வகையில் அமைந்துள்ளது. எனவே தாவா அசல் வழக்கு நிலுவையில் இருந்து வருகின்ற நிலையிலும், தாவா சொத்து தொடர்பாக இடைக்கால மனு எண் I.A.No. 429/2019ல் கடந்த 12.09.2019-ல் தற்காலிக உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு முரணாக எதிர்மனுதாரர்கள் தொடர்ச்சியாக தாவா சொத்துள்ள பகுதியில் கட்டுமான பணிகள் மேற்கொண்டு கட்டுமான பணிகள் நிறைவு செய்துள்ளதால், மேற்படி I.A.No429/2019ல் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவினை எதிர்மனுதாரர்கள் வேண்டுமென்றே கீழ்படியாமல் மீறியதாகவே (Willful disobedience) இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி எதிர்மனுதாரர்கள் செயலும் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 2Aன்படி நீதிமன்ற அவமதிப்பிற்குரிய செயலாகவே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**(10)** நீதிமன்ற அவமதிப்பு தொடர்பாக உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 29 விதி 2A-ல் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. **Order 39 Rule 2-A. Consequence of disobedience or breach of injunction. –** (1) In the case of disobedience of any injunction granted or other made under Rule 1 or Rule 2 or breach of any of the terms on which the injunction was granted or the order made, the Court granting the injunction or making the order, or any Court to which the suit or proceedings is transferred, may order the property of the person guilty of such disobedience or breach to be attached, and may also order such person to be detained in the civil prison for a term not exceeding three months, unless in the meantime the Court directs his release.

(2) No attachment made under this rule shall remain in force for more than one year, at the end of which time, if the disobedience or breach continues, the property attached may be sold and out of the proceeds, the Court may award such compensation as it thinks fit to the injured party and shall pay the balance, if any, to the party entitled thereto.]

மேலும் நீதிமன்ற அவமதிப்பு குற்றத்திற்கு பிறப்பிக்கப்படும் உத்திரவு தொடர்பாக மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் அடியிற்கண்ட வழக்கில் முன்தீர்ப்பு வழங்கப்பட்டு சட்ட இதழ்களில் பதிவுகளும் ஏற்பட்டுள்ளது.

**Samee Khan v. Bindu Khan, AIR 1998 SC 2765**

**Order 39 Rule 2-A – Injunction – Disobedience- Words "and may also"** – Court empowered to detain person in civil prison or attach his property – Both steps can be resorted to or one of them alone need be chosen depending on fact situation.

The words "any may also" in Order 39, Rule 2-A cannot be interpreted in the context as denoting to a step which is permissible only as additional to attachment of property of the opposite party. If those words are interpreted like that it may lead to an anomalous situation. If the person who defies the injunction order has no property at all, the Court becomes totally powerless to deal with such a disobedient party. He would be immured from all consequences even for any open defiance of a Court order. No interpretation shall be allowed to bring about such a sterile or anomalous situation.

It is open to the Court to attach the property of the disobeying party and at the same time the Court can order him to be detained in civil prison also if the court deems it necessary. Similarly the Court which orders the person to be detained in civil prison can also attach the property of that person. Both steps can be resorted to or one of them alone need be chosen. It is left to the Court to decide on consideration of the fact situation in each case.

மேலும் இது தொடர்பாக மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் அடியிற்கண்ட வழக்குகளில் முன்தீர்ப்பு வழங்கப்பட்டு சட்ட இதழ்களில் பதிவுகளும் ஏற்பட்டுள்ளது.

**1) V. Uma v. V. Balaji, 2011 (5) MLJ 42 (Mad): 2011(2) CTC 861 (Mad): AIR 2011 (Mad) 197.**

**Order 39, Rule 2-A- Judicial Order.-** The main object of Rule 2A of Order 39 is to uphold the majesty of judicial orders, as otherwise, it would erode the faith of litigants in the Justice Delivery System.

**2) V. Uma v. V. Balaji, 2011 (2) CTC 861**

**Order 39, Rule 2-A – Nature and scope of. Rule 2A of Order 39 of CPC.,** takes care of situation in case a party against whom order of injunction was issued, violate said order. It provide for attachment and sale of property, belonging to contemnor.

**3) Kanwar Singh Saini v. High Court of Delhi, 2012 (1) LW 689 (SC); 2012 (2) MLJ(CRI) 409(SC)**

**Order 39, Rule 2-A – Breach of injunction .** - The scope of the proceedings under Order 39, Rule 2-A. CPC is entirely different. It is a mode to compel the opposite party to obey the order of injunction by attaching the property and detaining the disobedient party in civil prison as a mode of punishment for being guilty of such disobedience. Breach of undertaking given to the Court amounts to contempt in the same way as a breach of injunction and is liable to be awarded the same punishment for it.

**4) Siddammal v. Arulmigu Selliandiammal Thirukoil, 2016 (6) CTC 71 (Mad)**

**Order 39 Rule 2A – Interim order.** - This order is not a remedy for the party who has obtained an interim order but, it only provides penal action against the persons, who have committed the breach of interim order.

**5) Chennaru Naghbhushan Rao vs. M. Rama Rao and others, AIR 1992 On. 76: 1992(73) Cut LT 329.**

**Order 39, Rule 2A – Order for injunction restraining any unauthorised construction-** Construction raised ignoring such directions- In such circumstances Court directed demolition of unauthorized construction – The contention that the damage may be compensated in money not accepted.

6) **AIR 1998 SC 2765. The words 'and may also" in Rule 2A** cannot be interpreted in the context as denoting to a step which is permissible only as additional to attachment of property of the opposite party. It is open to the court to attach the property of the disobeying party and at the same time the court can order him to be detained in civil prison also if the court deems it necessary. Similarly, the court which orders the person to be detained in Civil prison can also attach the property of that person. Both steps can be resorted to or one of them alone need be chosen. If is left to the Court to decide on consideration of the fact situation in each case

**7) AUR 1998 Raj 11**.Punishment of civil imprisonment in the case of violation or disobedience of the order of an injunction of Court is to be awarded 'in addition to" and not 'in lieu of" or 'in the alternative" of the punishment of attachment of his property.

**(11)** மேலும் மேற்படி சட்டவகையகங்கள் மற்றும் நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடுகளின்படி எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளின் நீதிமன்ற அவமதிப்பு குற்றச்செயல்பாட்டிற்கு மேற்படியார்களின் சொத்துக்களை பற்றுகை செய்தும், மேற்படி எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் உரிமையியல் சிறையில் இருத்தி வைப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் இடைக்கால மனு எண் IA.No.429/2019ன்படி கடந்த 12.09.2019ல் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்தி பிறப்பிக்கப்பட்ட தற்காலிக உறுத்துக்கட்டளை உத்திரவின் பேரில் மேல்முறையீடோ அல்லது சீராய்வோ எதுவும் செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித எதிர்வாதமும் சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் இந்த நிர் அசல் வழக்கு நடவடிக்கையில் நாளது தேதி வரை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பங்கு பெற்று வருகின்றனர். மேலும் தற்காலிக உறுத்துக்கட்டளை உத்திரவு மற்றும் அதனை மீறிய செயல் மற்றும் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை தொடர்பாக ம.சா.ஆ.1ன்படி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் கவனத்திற்கு சட்டப்படி தெரியப்படுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி தற்காலிக உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்ட விபரம் தெரிந்து கொண்டு

வேண்டுமென்றே அதற்கு கீழ்படியாமல் (Willful Disobedience) மேற்படி உறுத்துக்கட்டளை உத்திரவினை மீறி தாவா சொத்தில் கட்டுமான பணிகளை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மேற்கொண்டுள்ளார்கள் என்பது மேற்கண்ட பரிசீலனையின்படி தீர்மானம் செய்யப்பட்டுள்ளதால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் செயல் நீதிமன்ற அவமதிப்பிற்குரியதாகிறது என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எனவே நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டவகைமுறைகளை பரிசீலனை செய்யும்போது, மேற்படி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 2Aல் தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவினை மீறும் நபர்களின் சொத்துக்களை பற்றுகை செய்தும், மற்றும் 3 மாத காலம் உரிமையியல் சிறையில் அடைப்பதற்கும் வழிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி இம்மனு பரிகாரமாக எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கக்கோரி வாதியால் நிவாரணம் கோரப்பட்டுள்ளது.

**(12)** மேலும் தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவு 12.09.2019-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அசல் வழக்கில் இறுதி தீர்ப்பு வழங்கப்படும் வரை அதற்கு கீழ்படிந்து செயல்பட வேண்டியது வழக்கு தரப்பினர்களின் சட்டக்கடப்பாடு (Legal Obligation) ஆகும். அதனை மீறி செயல்படும் பட்சத்தில் அதற்குரிய தகுந்த சட்ட நடவடிக்கை மற்றும் சட்ட நிவாரணம் வழங்கப்படாத பட்சத்தில் சட்டம் மற்றும் நீதிமன்ற நடவடிக்கையின் மீதான நம்பகத்தன்மை குலைந்து விடக்கூடிய அபாய நிலைய இருப்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மேற்படி நீதிமன்ற தற்காலிக உறுத்துக்கட்டளை உத்திரவினை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வேண்டுமென்றே கீழ்படியாமல் (Willful Disobedience) செயல்பட்டு வந்துள்ளதற்கு அவரது சொத்தினை பற்றுகைக்கு உள்ளாக்கி உத்திரவிட வேண்டியது நீதியின் நலனை நிலைநிறுத்தும் பொருட்டு அவசியமானதாகவும், நியாயமானதாகவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

**(13)** மேலும், தற்சமயம் கொரானா தொற்று நோய் பரவல் அதிகமாக இருக்கின்ற நிலையிலும், அது தொடர்பாக மாண்புமிகு உயர்நீதிமன்றம் தகுந்த வழிகாட்டுதல் பிறப்பித்துள்ள நிலையிலும், வழக்கு தரப்பினர்களில் 1ம் எதிர்மனுதாரர் பெண் பாலராகவும் இருப்பதாலும் வழக்கு தரப்பினர்கள் இருவரும் அடுத்தடுத்து, குடியிருப்புதாரர்களாகவும் இருக்கின்ற நிலையிலும், வழக்கு தரப்பினர்களுக்கிடையே மேலும் மனவேறுபாடுகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும், மனுப்பரிகாரமாக கோரப்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை தொடர்பாக பிரதிவாதிகளுக்கு பாத்தியமான தாவா சொத்திற்கு வடபுறமுள்ள பழைய சர்வே எண் 713/1 நிருக்கு நத்தம் நிலவரி மனைப்பட்டா ரீசர்வே எண். 1698/37ல் கட்டுப்பட்ட சொத்து மற்றும் அதிலுள்ள கட்டிடங்கள் அனைத்தையும் பற்றுகைக்கு உட்படுத்தி உத்திரவிடுவது, நீதியின் நலனுக்கு உகந்ததாகவும், நீதிமன்றங்களின் மீது பொதுமக்களுடைய நம்பிக்கையினை

உறுதிப்படுத்துவற்கும் அவசியமானதாகவும், நியாயமானதாகவும் இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன்படி உரிமையியல் நீதிமன்றம் நீதியின் நலனை நிலைநிறுத்தும்பொருட்டு தகுந்த உத்திரவுகள் பிறப்பிப்பதற்கு உள்ளார்ந்த அதிகாரம் பெற்றுள்ளது எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

**(14)** மேலும் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 151ல் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**Sec. 151. Saving of inherent powers of Court.** - Nothing in this Code, shall be deemed to limit or otherwise affect he inherent power of the Court to make such orders as may be necessary for the ends of justice or to prevent abuse of the process of the Court.

இது தொடர்பாக மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் அடியிற்கண்ட வழக்கில் முன்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

**N. Bhageerathan (Vs) The Assistant provident Fund Commission was reported in 2017(1) CWC 694 (Mad (MB)**

**Section 151** confers such an inherent power on the court to pass suitable orders for the ends of Justice. The words inherent power of the court and words" for the ends of Justice" are paramount. To meet the ends of Justice, the inherent power of the court shall not be limited under any express provision of CPC.

**(15)** எனவே எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பாத்தியமான சொத்தினை பற்றுகை செய்வது தொடர்பாக பரிசீலனை செய்யும்போது, இடைக்கால மனு I.A.No.429/2019-ல் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 05.02.2004ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தாவா சொத்திற்கு வடக்கே உள்ள எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியமான பழைய சர்வே எண். 713/1 அதற்கு புதிய சர்வே எண். 1698/37ல் கட்டுப்பட்ட கிழமேல் ஜாதியடி 20 தென்வடல் ஜாதியடி 43 மொத்தம் 860 சதுரடி விஸ்தீரணம் உள்ள சொத்தானது, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பாத்தியமானதாக உள்ளது என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மையாக உள்ளது. மேலும் மேற்படி சொத்தினை நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைக்கு உட்படுத்த மேற்படி சொத்து விபரத்தினை இம்மனு சொத்து விபரத்தில் 3வது லக்க சொத்தாக சேர்த்து மனுவினை திருத்தம் செய்ய அனுமதி கோரி மனு தாக்கல் செய்து அதுவும் இடைக்கால மனு எண். I.A.No. 236/2021ன்படி கடந்த 17.04.2021ம் தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கு பிராதில் 3வது லக்க சொத்தை சேர்த்து திருத்தம் செய்யவில்லை என்றும், 3வது லக்க சொத்தினை பொறுத்து வழக்குப்பரிகாரம் கோரப்படவில்லை என்றும், 3வது லக்க சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியமானது என்பதை மனுதாரர்கள்/வாதிகள் மறுக்கவில்லை என்றும், எனவே 3வது லக்க

சொத்தினைப் பொறுத்து மனுதாரர்/வாதி எவ்வித நிவாரணமும் கோர இயலாது என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது. ஆனால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு எதிர்வாதத்தின்படியே 3வது லக்க சொத்தினை பொறுத்து மனுதாரர்/வாதி எவ்வித பாத்தியமோ அல்லது நிவாரணமோ கோரவில்லை. ஆனால் நீதிமன்ற அவமதிப்பு குற்றச்செயல்பாட்டிற்குரிய நிவாரணம் பெறுவதற்காக மட்டுமே இம்மனு நடவடிக்கையில் 3வது லக்க சொத்து சேர்க்கப்பட்டுள்ளதால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு மேற்படி எதிர்வாதம் பொருண்மைபடியோ சட்டப்படியோ ஏற்கத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

எனவே, இம்மனு அனுமதிக்கப்பட்டு, இடைக்கால மனு I.A.No.429/2019-ல் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 05.02.2004ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதும் இம்மனுவில் 3வது லக்க சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளதுமான தாவா சொத்திற்கு வடக்கே உள்ள எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியமான பழைய சர்வே எண். 713/1 அதற்கு புதிய சர்வே எண். 1698/37ல் கட்டுப்பட்ட கிழமேல் ஜாதியடி 20 தென்வடல் ஜாதியடி 43 மொத்தம் 860 சதுரடி விஸ்தீரணம் உள்ள சொத்தானது பற்றுகை செய்து உத்தரவிடப்படுகிறது. அதன்படி இவ்வுத்திரவு பிறப்பிக்கப்பட்டதிலிருந்து ஒரு மாதத்திற்குள் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தற்காலிக உறுத்துக்கட்டளைக்கு வேண்டுமென்றே கீழ்படியாமல் தாவா பிரச்சனைக்குரிய சொத்து அமைந்துள்ள பகுதியில், கட்டிடம் கட்டி முடித்துள்ளதை தங்களது சொந்த செலவில் இடித்து அப்புறப்படுத்தி தற்காலிக உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்ட 12.09.2019ம் தேதியில் இருந்த நிலையில், மீட்டு வைக்க (Restitution) உத்திரவிடப்படுகிறது. தவறும்பட்சத்தில் எதிர்மனுதாரர்கள் அதற்குரிய நஷ்டஈட்டு இழப்பீட்டுத் தொகையாக மனுதாரருக்கு ரூ.5,00,000/-(ரூபாய் ஐந்து லட்சம்) வழங்கும் பொருட்டு மேற்படி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் பற்றுகை சொத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 2A உட்பிரிவு (2)ன்படி விற்பனை செய்து, மேற்படி விற்றத்தொகையிலிருந்து மேற்படி நஷ்டஈட்டுத்தொகை ரூ.5,00,000/- மனுதாரர்/வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றும், எஞ்சிய தொகை ஏதுமிருப்பின் அது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை சேரக்கூடியது என்றும் உத்திரவிடப்படுகிறது.

**(16)** மேலும் மேற்படி இழப்பீடு வழங்குவது தொடர்பாக உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 35ல் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**35. Costs. - (1)** Subject to such conditions and limitations as may be prescribed, and to the provisions of any law for the time being in force, the costs of and incident to all suits shall be in the discretion of the Court, and the Court shall have full power to determine by whom or out of what property and to what extent such costs are to be paid, and to

give all necessary directions for the purposes aforesaid. The fact that the Court has no jurisdiction to try the suit shall be no bar to the exercise of such powers.

(2) Where the Court directs that any costs shall not follow the event, the Court shall state its reasons in writing.

மேலும் இது தொடர்பாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் அடியிற்கண்ட வழக்குகளில் முன்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

**1) Sanjeev Kumar Jain (v) Raghubir Saran, Charitable Trust, 2012 (1) LW 49 (SC) : 2012 (1) MLJ 329 (SC): 2012 (1) CTC 874 (SC).**

**Section 35(2) – Levy of costs and compensatory costs.** - The mandate of sub-section (2) of Section 35 of CPC that "where the Court directs that any costs shall not follow the event, the Court shall state its reasons in writing" is seldom followed in practice by Court. Many Courts either do not make any order as to costs or direct the parties to bear their respective costs without assigning or recording the reasons for giving such exemption from costs. Unless the Courts develop the practice of awarding costs in accordance with Section 35 of CPC (that is, costs following the event) and also give reasons where costs are not awarded, the object of the provision for costs would be defeated. prosecution and defence of cases is a time consuming and costly process. A plaintiff/petitioner/appellant who is driven to the Court, by the illegal acts of the defendant/respondent, or denial of a right to which he is entitled, if he succeeds, to be reimbursed of his expenses in accordance with law. Similarly a defendant/respondent who is dragged to Court unnecessarily or vexatiously, if he succeeds, should be reimbursed of his expenses in accordance with law. Further, it is also well recognized that levy of costs and compensatory costs is one of the effective ways of curbing false or vexatious litigations.

**2) K. Sampath (v) Jayaraman, 2016(8) MLJ 606 (Mad).**

**COSTS**

> **Acceptance of costs by a party.** The acceptance of costs by a party would not amount to waiving his right to challenge an order. It is one thing to say that a party will pay costs as a condition for grant of a relief prayed for by him. It is quite another to say that the party, who accepts costs cannot challenge the order wherein the same is made payably. Courts cannot be seen as placing reliance on a price against their orders being tested.

**3) Dnyandeo Sabaji naik v. Pardnya Prakash Khadekar, 2017(2) CTC 776 (SC)**

> **Imposition of exemplary costs.** The imposition of exemplary costs is a necessary instrument which has to be deployed to weed out, as well as to prevent the filing of

frivolous cases. It is only then that the Courts can set a party time to resolve genuine causes and answer the concerns of those, who are in need of justice. Imposition of real time costs is also necessary to ensure that access to Court is available to citizens with genuine grievances. Otherwise, the doors would be shut to legitimate causes simply by the weights of under serving cases which flood the system. Such a situation cannot be allowed to come to pass. Hence it is not merely a matter of discretion but a duty and obligation cast upon all Courts to ensure that the legal system is not exploited by those who use the forms of the law to defeat or delay justice.

**4) S. Sudhakar (v) Udayam Marketing, 2018(8) MLJ 15 (Mad).**

**Compensatory cost.** - Considering that the plaintiffs had to carry the litigation through for a period of one decade, compensatory costs of Rs. 2,00,000/- is awarded in addition to usual costs, which is under sub-paragraph (f) of the prayer paragraph i.e., limb No. 6 in the plaint.

**(17)** மேலும் மேற்படி நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான இந்த நிர் மனு விசாரணையின் போது எதிர்மனுதாரர்கள் தரப்பில் IA.No. 429/2019 உத்திரவிற்கு முரணாகவும், 05.02.2004 பதிவு செய்யப்பட்ட கிரைய ஷரத்துக்களுக்கு முரணாகவும் பொய்யான மற்றும் அலைக்கழிக்கும் தன்மையுடைய எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளதும் தெரியவருகிறது. மேற்படி பொய்யான அல்லது முகாந்திரமில்லாத வாதம் அல்லது எதிர்வாதம் செய்வது தொடர்பாக உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 35Aல் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

Sec: 35-A Compensatory cost in respect of false or vexatious claims or defenses. (1) If in any suit or other proceedings (including an execution proceeding but (excluding an appeal or a revision) any party objects to the claim or defence on the ground that the claim or defence or any part of it is, as against the objector, false or vexatious to the knowledge of the party by whom it has been put forward, and if thereafter,as against the objector, such claim or defence is disallowed, abandoned or withdrawn in whole or in part, the Court (if it so things fit,} may, after recording its reasons for holding such claim or defence to be false or

vexatious, make an order for the payment to the objector by the party by whom such claim or defence has been put forward, of cost by way of compensation.

(2) No Court shall make any such order for the payment of an amount exceeding,(three thousand rupees) or exceeding the limits of it pecuniary jurisdiction, whichever amount is less:

மேலும் இது தொடர்பாக மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் அடியிற்கண்ட வழக்கில் முன்தீர்ப்பு வழங்கப்பட்டு 2010(4)CTC 546(SC) என்ற சட்டஇதழில் பதிவுகளும் ஏற்பட்டுள்ளது.

**Vinod seth (vs) Devindar Bajaj**

**Section 35 A: Clear title supported by documents- In the absense of:** Nature of provision of section 35-A of CPC provides for levy of compensation costs in respect of false and vexatious claim.

**2) 2009(5) CTC 693. S. Gunaseelan (vs) Valarmathi case**

**Section 35 A- payment compensatory cost:** It at all suit is vexatious and based on false assertion, plaintiff would be liable to pay compensatory costs u/s 35-A of CPC.

எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

**(18)** மேலும் இந்திய சாட்சிய சட்டம் சட்டப்பிரிவு 92ன்படி பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில் உள்ள சரத்துக்களுக்கு முரணாக மேற்படி சரத்துக்களை மாறுதல் செய்யும் பொருட்டோ அல்லது அழிக்கும் பொருட்டோ அல்லது கூடுதலாக்கும் பொருட்டோ அல்லது குறைவாக்கும் பொருட்டோ எவ்வித சாட்சியங்களும் முன்னிலைப்படுத்த இயலாது என்பதும் நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்படாகும். மேற்படி சட்டப்பிரிவு 92ல் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**Sec. 92 . Exclusion of evidence of oral agreement.** - When the terms of any such contract, grant or other disposition of property, or any matter required by law to be reduced to the form of a document have been proved according to the last section, no evidence of any oral agreement or statement shall be admitted, as between the parties to any such instrument or their representatives-in interest, for the purpose of contradicting, varying, adding to or subtracting from its terms

மேலும் இது தொடர்பாக **S. Sanjeevi (vs) Ledarthi @ Lilly and others** வழக்கில் அடியிற்கண்டவாறு உத்தரவு வழங்கப்பட்டும் அதுவும் 2017(3) TNCJ 482 (Mad)CMB இதழில் பதிவுகள் ஏற்பட்டுள்ளது.

**Sec. 92 Scope of** – No amounts of oral evidence can be given an against the writings in a document particularly in a registered document- Evidence can be adduced if fraud is allowed. Fraud has to be pleaded and proved. அதன்படி இந்த நிர் வழக்கு பொருண்மையினை பரிசீலனை செய்யும்போது, 05.02.2004ம் தேதியிட்ட பதிவு செய்த கிரைய ஆவணத்தில் "நல்லமரெட்டியார் வீட்டிற்கும் பாதைக்கும் வடக்கு" என குறிப்பிடப்பட்டுள்ளதற்கு முரணாகவும், இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 92 ஷரத்துக்களுக்கு முரணாகவும், பொய்யான வீண் அலைக்கழிப்பு மற்றும் காலவிரையம் மற்றும் பொருளாதார விரையங்கள் ஏற்படுத்தும் உட்கருத்துடன் பொய்யான மற்றும் முகாந்திரமில்லாத எதிர்வாதம் செய்த பொருட்டும், நீதிமன்ற நேரத்தை வீணடித்த செயலினை ஈடு செய்த பொருட்டும், உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 35(A)ன்படி செலவு தொகை ரூ.3,000/- எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள், மனுதாரர்/வாதிக்கு 30 தினங்களுக்குள் கொடுக்க வேண்டும் என்றும் உத்திரவிடப்படுகிறது.

எனவே மேற்கண்ட பொருண்மைகள் மற்றும் சட்டநிலைப்பாடுகளின்படி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் நீதிமன்ற உத்தரவினை மீறி உள்ள நிலையிலும், மேற்படி மனு தொடர்பான விசாரணையில் எவ்வித நியாயமான, முக்கியத்துவம் இன்றி பொய்யான மற்றும் வீண்அலைக்கழிக்கும் தன்மையுடைய எதிர்வாதத்தை முன்னிலைப்படுத்தியதை ஈடு செய்யும் பொருட்டு மனுதாரர்/வாதிக்கு ரூ.3000/- 1ம் பிரதிவாதி செலவுதொகையாக செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்பட்டு, இடைக்கால மனு I.A.No.429/2019 மனுவில் கடந்த 12.09.2019ம் தேதி பிறப்பிக்கப்பட்ட தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவினை எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் மீறி வேண்டுமென்றே கீழ்படியாமல் தாவா சொத்தில் கட்டுமானங்கள் கட்டி நிறைவு செய்ததின் அடிப்படையில் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு பாத்தியமான இம்மனுவில் 3வது லக்க சொத்தாக குறிப்பிடப்பட்ட மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், கச்சைக்கட்டி கிராமம் உள்கடை செம்மனிப்பட்டி, நத்தம் குடியிருப்பு பழைய சர்வே எண்.713/1 நிருக்கு நத்தம் நிலவரி மனைப்பட்டா ரீசர்வே எண்.1698/37 நிரில் கிழமேல் 20 அடி தென்வடல் 43 அடி மொத்தம் 860 சதுரடி விஸ்தீரணமுள்ள சொத்தினை பற்றுகை செய்து உத்தரவிடப்படுகிறது. மேற்படி எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் I.A.No.429/2019 தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவினை மீறி ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்பு கட்டுமான பகுதிகளை

இவ்வுத்திரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் தனது சொந்த செலவில் அகற்றிக்கொள்ள தவறும்பட்சத்தில், பற்றுகைக்கு உள்ளான அவரது சொத்தாகிய பழைய சர்வே எண்.713/1 நிருக்கு நத்தம் நிலவரி மனைப்பட்டா ரீசர்வே எண்.1698/37ல் கட்டுப்பட்ட சொத்தானது உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 2A உட்பிரிவு (2)ன்படி நீதிமன்ற நடவடிக்கை மூலம் விற்பனைக்கு உட்படுத்தப்பட்டு அந்த விற்பனை தொகையிலிருந்து மனுதாரர்/வாதிக்கு நஷ்டஈடுத்தொகையாக ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) சட்டப்படி வழங்கக்கூடியது என உத்தரவிடப்படுகிறது. மேலும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் நீதிமன்ற உத்தரவினை மீறி உள்ள நிலையிலும் மேற்படி மனு தொடர்பான விசாரணையினை எவ்வித நியாயமான, முக்கியத்துவம் இன்றி பொய்யான மற்றும் வீண் அலைக்கழிக்கும் தன்மையுடைய எதிர்வாதத்தை முன்னிலைப்படுத்தியதை ஈடு செய்யும்பொருட்டு மனுதாரர்/வாதிக்கு ரூ.3000/- எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் நஷ்ட ஈட்டுத் தொகையாக 30 தினங்களுக்குள் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 35(A)ன் படி செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம். D. ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**1) மனுதாரர் தரப்பு ஆவணங்கள்**

ம.சா.ஆ.1 - 07.11.2019 ம் தேதியிட்ட IA. 429/2019 உத்தரவு மீறப்பட்டது தொடர்பாக நீதிமன்ற அவமதிப்பு குறித்த சட்ட அறிவிப்பு ஆகும்.

ம.சா.ஆ.2 - ம.சா.ஆ.1ஐ பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை

ம.சா.ஆ.3 - குறுந்தகடு

ம.சா.ஆ.4 - எதிர்மனுதாரர்கள் கட்டியுள்ள கட்டுமான பணிகள் தொடர்பாக எடுக்கப்பட்ட புகைப்படங்கள்( வரிசை 5)

**2) எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆவணங்கள்**

எம.சா.ஆ.1- OS No 73-19 பிராது நகல்

எ.ம.சா.ஆ.2- இடைக்கால மனு எண் IA. No. 429/19 மனு நகல்

(ஓம். D. ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//